# ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் : கலையும் கருத்தியலும்



பதிப்பாசிரியர்கள்
முனைவர் க. முருகேசன்
முனைவர் சு. இராமலிங்கம்

# ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் : கலையும் கருத்தியலும்

(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

பதிப்பாசிரியர்கள் : முனைவர் க. முருகேசன்
முனைவர் சு. இராமலிங்கம்
பதிப்புரிமை : பதிப்பாசிரியர்கள்
முதற்பதிப்பு : ஜுலை, 2016
வெளியீடு : தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641029.
கணினி அச்சாக்கம் : பிரடாக் பிரிண்ட்,
476 பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 29.
அலைபேசி : 98432 73994, 91505 91017
பக்கங்கள் : XVI + 416 = 432
விலை : உரூ. 350/-

ISBN : 978 - 81 - 932327 - 8 - 1

# International Conference on Art and Ideology of Dr. N. Subbu Reddiar

Editor's : **Dr. K. Murugesan.**
**Dr. S. Ramalingam**
Copyright's : Editors
First Edition : July, 2016
Published : **Department of Tamil**
**Kongunadu Arts and Science College**
Coimbatore - 641 029.
Computer Printing at : **Prdag Print**
476/1, Near Boomadevi Kovil
G.N. Mills (Po), Coimbatore - 29.
Cell : 98432 73994, 91505 91017
Pages : XVI + 416 = 432
Prize : **Rs. 350/-**

61. **இரா. வாணிபிரபா** 312
ந.சுப்புரெட்டியார் பார்வையில் சகோதரத்துவம்

62. **முனைவர். மு. ருக்மணி** 316
ந.சுப்புரெட்டியாரின் உணர்ச்சியின் தத்துவம்

63. **வே. அம்சவேணி** 321
ந.சுப்புரெட்டியார் "சைவ சமய விளக்கு" நூலில்
சித்தாந்தக் கூறுகள்

64. **முனைவர் ச. அரிச்சந்திரன்** 326
ந. சுப்புரெட்டியார் பார்வையில் கவிதைப் படைப்பாக்கம்

65. **முனைவர் ஆ. சரவணன்** 331
ந. சுப்புரெட்டியார் பார்வையில் 'அர்ச்சிராகதி'

66. **முனைவர். நா. கீதா** 335
அர்த்த பஞ்சக ஞானம்

67. **முனைவர் எஸ். குமரன்** 340
ந. சுப்பு ரெட்டியார் உணர்த்தும் தொல்காப்பியம்
காட்டும் வாழ்க்கை

68. **முனைவர் த.பிரியா** 345
ந.சுப்புரெட்டியார் உள்ளத் தெருக்களில் உலா வரும்
கவிதையனுபவம்

69. **மு. ஷாஜஹான்** 350
ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் ஐந்திணை நெறிகளும்
இடந்தலைப்பாடும்

70. **இரா. மாலினி** 354
ந.சுப்புரெட்டியார் பார்வையில் பாஞ்சாலி சபதக்
கதை மாந்தர்கள்

71. **முனைவர் இரா. மணிமேகலை** 359
சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம் - நூல் ஆய்வுரை

72. **முனைவர் ச. கவிதா** 365
பாரதி இயல் ஆய்வில் பேராசிரியர்
ந.சுப்புரெட்டியாரின் பங்களிப்பு

73. **முனைவர் கு. முத்துக்குமார்** 370
ந. சுப்புரெட்டியாரின் மெய்யியல் பார்வை

74. **வெ. மைதிலி** 376
ந. சுப்புரெட்டியாரின் கவிதைச் சிந்தனைகள்

75. **முனைவர் சு. சதீஷ்குமார்** 379
ந.சுப்புரெட்டியார் காட்டும் திருக்கோயில் தத்துவம்

# 64. ந. சுப்புரெட்டியார் பார்வையில் கவிதைப் படைப்பாக்கம்

**முனைவர் ச. அரிச்சந்திரன்**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

உயிரினங்களில் கிடைத்தற்கரிய பிறவி மனிதப்பிறவி. இப்பிறவியை இவ்வுலகில் பயனுள்ள வகையில் பயன்படுத்தி தாம் வாழ்ந்தமைக்கான அடையாளத்தைப் பிறருக்குப் பாடமாக்கி விட்டுச் சென்றவர்கள் சிலரே. அவர்களும் விரல் விட்டு எண்ணத்தக்க வகையிலேயே உள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ந. சுப்புரெட்டியார். உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராகத் தமது பணியைத் தொடங்கி திருப்பதித் திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தமிழ் மொழியில் இலக்கணம், இலக்கியம், மருத்துவம், வாழ்வியல் போன்றவற்றில் பல்வேறு நூல்களைப் படைத்தவர். பொன்னம்பல அடிகளார் கூறுவதைப் போல,

தமிழைக் கற்பவர் சிலர்; கற்ற வழி நிற்பவர் சிலரில் சிலர்! கற்றவழி நின்றதோடு, நானிலத்தை நல்வழிப்படுத்த சமூகம் மேம்பாடடைய வழிகாட்டுவோர் வெகுசிலர்! தமிழால் தரணியில் உயர்பீடத்தில் நிற்பவர் பலர்! தமக்காய்த் தமிழை விற்பவர் பலர்! தமக்கெனத் தமிழைப் பயன்படுத்தி, மலரின் மகரந்தத்தில் தேனை நுகர்ந்து மரப்பொதியில் மனித சமூகத்திற்குச் சேர்த்து வைக்கின்ற தேனீயைப் போலத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு உழைக்கும் நற்றமிழறிஞர் ந. சுப்புரெட்டியார் எனப் பேராசிரியரின் தமிழ்பணியைப் போற்றியுரைப்பார்.

சுப்புரெட்டியார் தமிழன்னைக்கு யாத்தளித்த நூல்களில் குறிப்பிடத்தக்க நூல்கள் கவிதை குறித்த நூல்கள். கவிதை என்பது எவ்வாறு அமைய வேண்டும் என்பதைச் சுப்புரெட்டியார் தனது நூல்களில் சுட்டிக்காட்டியுள்ளார். எழுதுவதெல்லாம் கவிதையாகி விடாது. எவ்வகைக் கவிதையாக இருப்பினும் அவை அடிப்படையில் சில கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் அவை ஒரு முழுமையான கவிதையாக உருப்பெருகிறது. சுப்புரெட்டியார் கூறும் கவிதைக்கான சில அடிப்படைக் கூறுகள் தற்காலக் கவிதைகளில் எங்ஙனம் பொருந்தியுள்ளது என்பதை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை